

The Journal of THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.

Vol. XIV

No. 2

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1960 S'aka 1882

Annual Subscription Rs. 4.

The following back numbers of the Journal of The Tanjore Sarasvati Mahal Library, are available for sale :—

Vol.	IX.	Parts I, II & III.	Price Rs.	2/-
„	X.	„	...	4/-
„	XI.	„	...	4/-
„	XII.	„	...	4/-
„	XIII.	„	...	4/-

(Postage Extra)

As only a very few copies are available, book your orders early.

Copies can be had of :—

The Honorary Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.
(Madras State)

The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.

Vol. XIV No. 2

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1960 S'aka 1882

Annual Subscription Rs. 4.

CONTENTS.

No.		Pages.
1.	Editorial	
2.	வேதவிஜ்ஞானம்-VI.-"உபவாஸம்" —நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்.	1—8
3.	திருக்கோவையாரிற் கண்ட திருக்கோவில்கள்-1. —வித்துவான் திரு இராம. கோவிந்தசாமி பிள்ளை.	9—20
4.	श्रीमद्भागवत-माधवात्मजकृतमराठीभाषान्तर-प्रथमस्कन्ध —Sri G. Nāgarāja Rao	4(129-132)+4=8
5.	Minor works of Sri Venkatāchāriar 1. लक्ष्मीशतकम् 2. यमकरामायणम् with Ṭippaṇi by Sri D. T. Tātāchārya S'irōmaṇi, M. O. L., —Sri N. S. Dēvanāthāchāriar	1—26
6.	श्रीभगवत्पादसप्ततिः श्रीजगन्नाथविरचिता —Sri N. V. Venkatasubrahmanya S'āstri	12 (1-12)+2=14
7.	सूक्तिमालिका-श्रीनारोजिपण्डितविरचिता द्राविडानुवादेन सहिता ஸ்ரீ நாரோஜீ பண்டிதரால் இயற்றப்பட்ட ஸூக்திமாலிகை தமிழ் மொழிபெயர்ப்புடன் —நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்	33—40
8.	निघण्टुसमुच्चयः - Sri P. V. Varadarāja Sarma, M. A.,	1—8
9.	தன்வந்தரி வைத்யம் - Dr. S. Venkatarājan, L. I. M.,	97—112
10.	आपस्तम्बस्मार्तप्रयोगः —Sri S. Sundarēsa S'āstri & Sri V. Sundara Sarma	1—8
11.	वैयाकरणसिद्धान्तकौमुदी-भट्टोजिदीक्षितकृता An Analysis in English by late Sri P. V. Nāganātha S'āstri (continued from Vol. XIV. No. 1.) —Sri N. S. Dēvanāthachariar	155—162
12.	Rājarañjanavidyāvilāsa Nāṭakamu by Tulaja Maharaja (1729-1735) —Sri V. Sundara Sarma	39+4=43
13.	Our Exchanges	2

THE JOURNAL OF THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

Vol. XIV. A. C. 1960 S'aka 1882 No. 2

EDITORIAL

The first article "Upavāsa" published in this issue is an attempt to trace the meaning of the word "Upavāsa" (to live by the side of) in Vēdic times and its changed sense in classical Sanskrit. The second article entitled "திருக்கோவையாரிற் கண்ட திருக்கோவில்கள்" gives an account of the shrines and temples referred to in Tirukkōvaiar by the great Māṇickkvāchakar.

Lakshmīśatakam and Yamakarāmāyaṇam are published from the manuscripts presented to this Library by the Jagirdar of Āraṇi. These are the compositions of one Veṅkatāchārya.

Bhagavatpāda Saptati is a small work in 70 verses by one Jagannātha, eulogising the greatness of Sri Saṅkarāchārya. The first part of this work portrays Bhudhist India swayed by nihilistic philosophy followed by an intellectual revolution ushered in by the great Āchārya through his absolute Monism. This work is full of poetic flourishes and reveals the erudition and profound Āchārya-Bhakti of its little known author.

Under the title "Nigaṇtu Samuchaya", the full text of "Geervāṇabhāṣā-bhūṣaṇam" (Jewel of the Divine Language) and portion of Hanuman Nighaṇtu noticed under the heading Nāmamanjari in the Descriptive Catalogue of the Saraswathi Mahal Library, have been published. Hanuman Nighaṇtu will continue in the next issue also.

The following serials have been continued in this issue :—

4. Bhāgavata-Marathi Bhāshāntara-Mādhavātmja.

7. Sūktimālika-Nārōjipandit.

9. Dhanvantari Vaidyam.

11. Siddhāntakaumudi - An analysis in English by late P. V. Nāganātha Śāstri.

Āpastambasmārtaprayōga, a hand book on the rituals to be performed by the followers of Āpastamba school is another useful addition to the serial.

Rājaranjana Vidyā Vilāsa, an alligorical Telugu Drama in the model of Prabōdhachandrōdaya of Kṛṣṇamiśra, by the Maratha King Tulajārāja alias Tukkōji-1729—1735 is the last in this issue but not least in importance. It is particularly noteworthy, being a Yakshagana type of Telugu Drama quite distinct from and different in its scope and composition from that of the Nāyak period.

S. GOPALAN,
Editor.

உபவாஸம்

நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர், வித்வான்,
ஸரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.

"உபவாஸம்" என்றால் "பட்டினிகிடத்தல்" என்றர்த்தம். நம் நாட்டு மக்களுக்கு மிகப்பழக்கமானது இச்சொல். இக்கருத்து இச்சொல்லுக்குப் பொருளாக அமைந்ததன் உண்மையை இக்கட்டுரையில் விளக்குவோம்.

"உபவாஸம்" என்னும் சொல், "உப" என்றும் "வாஸம்" என்றும் இரண்டு சொற்களின் சேர்க்கையாலுண்டானதொன்றாம். இவற்றுள் "உப" என்பது[1] உபஸர்கம். இதன் பொருள் "அண்மை' என்பதாம். "உபநயனம்" "உபவனம்" 'உபஜலம்" என்பதுபோன்ற இடங்களில் இவ்வுபஸர்கம் இப்பொருளிலேயே உபயோகிக்கப்பட்டுவருகின்றது. "வாஸம்" என்பது, "வஸ=நிவாஸே" என்னும் தாதுவி(பகுதியி)னின்று தோன்றியதாம். "வசித்தல்" "வாசம் செய்தல்" என்பது அதன் பொருளாம். ஆக, 'உபவாஸம்' என்னும் சொல்லுக்கு, 'சமீபத்தில் வாஸம் செய்தல்" என்பதே நேரான பொருள். இச்சொல் 'பட்டினி கிடத்தல்" என்னும் பொருளையுணர்த்தவல்லதான வகையை வேதங்களின் வழியில் சென்று விளக்குவோம்.

வேதங்கள் பலவகைப்பட்ட யாகங்களை விதிக்கின்றன. அவையெல்லாம் உலக க்ஷேமத்திற்காகவே அமைந்தவை. அவற்றுள் "தர்சபூர்ணமாஸ யாகம்" என்பது முதன்மையானது. அதற்கான முன்னேற்பாடுகளைக் கூறுமிடத்திலேயே இந்த 'உபவாஸம்" விளக்கப்பட்டுள்ளது. கிருஷ்ண யஜுர்வேதம் தைத்திரீய ஸம்ஹிதை, முதல் காண்டம், ஆறாவது ப்ரச்நம், ஏழாவது அனுவாகத்தில் இவ்விஷயம் பரக்கப்பேசப்படுகின்றது :—

"उपास्मिन् श्वो यक्ष्यमाणे देवता वसन्ति य एवं विद्वानग्निमुपस्तृणाति"

(தைத்-ஸம்-1-6-7-3.)

என்னும் சொற்றொடர் ஆங்குளது. "யாவனொருவன் இவ்வாறாக அறிந்து கொண்டு அக்நியை உபஸ்தரணம் பண்ணுகின்றானோ; அவன் நாளையதினம் யாகம் செய்யப்போகிறவனாக இருக்கையில் (இன்றே) தேவர்கள் அவனுடைய சமீபத்தில் வஸிக்கின்றனர்" என்பது ஷ்ருதி வாக்கியத்தின் கருத்து. இதன்

1. தாதுவி(பகுதியி)ன் முன்பு இணைந்து அதன் பொருளில் மாறுபாடு உண்டு பண்ணவல்ல ஒருவகைச் சொல்.

(உரிமை ஆசிரியருக்கே)

கருத்தை நன்குணர்வதற்குச் சிறிது முன்னுரை அவசியம். வேதமே அதையும் கூறுகின்றது.

தர்சபூர்ணமாஸ யாகம் அமாவாசையிலும் பௌர்ணமியிலும் செய்ய வேண்டிய யாகம். அக்நி, இந்திரன், மஹேந்திரன், அக்நீஷோமர்கள், முதலான தேவதைகள் பலரையும் தன் இருப்பிடத்திற்கு வருமாறு அன்புடன் அழைத்து, இனிய மந்திரங்களோதி மகிழ்வித்து, அவரவருக்கு விருப்பமான அவியுணவை அளித்து உண்பித்து, அவ்வத் தேவதைகளின் அருளைப்பெறுகின்றான் இந்த யாகத்தைச் செய்பவன். இதில் தேவர்களுக்கு ஒரு சங்கடம் தோன்றுகின்றது.

இந்த யாகம் செய்வதற்காக வகுக்கப்பட்ட ஒரே நாளில் ஒரே சமயத்தில், பல்வேறு இடங்களில், பல்லாயிரக்கணக்கான யஜமானர்கள் சிரத்தையுடன் மேற்கூறிய தேவர்களைத் தத்தம் இருப்பிடத்திற்கு வருமாறு அழைக்கின்றனர். யஜமானர்கள் பலர் இருப்பதுபோல் தேவர்கள் பலர் இல்லை. ஒரு இந்திரன்தான். ஒரே அக்நிதான். மற்ற தேவதைகளும் ஒவ்வொருவரேதான். யாருடைய யாகத்திற்குச் செல்வது? யாருடைய யாகத்திற்குச் செல்லாது விடுவது? இதுதான் தேவர்களுடைய சங்கடம்.

இதற்கொரு பரிகாரம் உண்டு. தேவதைகளை யாகத்துக்கு வருமாறு, அதற்கென வகுக்கப்பட்ட மந்திரங்களை ஓதி அழைப்பதில் எவன் முந்திக்கொள்கின்றானோ, அவனுடைய யாகத்திற்குத்தான் தேவர்கள் செல்கின்றனர். ஆதலின் யாகம் செய்யும் நன்னாளுக்கு முதல் தினமே அந்தி வேளையில் தேவர்களைத் தன்னிருப்பிடத்திற்கு வரவழைத்து வைத்துக்கொண்டு மறுநாள் அவர்களை யாகத்தினால் மகிழ்விக்கலாம். *அதனால் யாகம் செய்வதற்கு முதல் தினம் மாலை வேளையிலேயே மந்திர பூர்வகமாக தேவதைகளைத் தன்னிருப்பிடத்தில் வரவழைத்துத் தங்கவைத்துக்கொண்டு மறுநாள் முறைப்படி அவர்களை ஆராதிக்கவேண்டும்.

தன் வீட்டில் தேவர்களுக்குத் தங்குவதற்கு இடம் வேண்டுமே! த்ரேதாக்நி என்று வழங்கும் மூன்று அக்நிகளுள் கீழ்ப்புறத்தில் அமைந்துள்ளதான "ஆஹவநீயம்" என்னும் அக்நியேதான் தேவர்களுக்கேற்ற இடம். அதிலேயேதான்

---

* இதனாலும் சங்கடம் தீர்ந்தபாடில்லை எல்லோரும் முன் ஜாக்ரதையாக முதல் நாள் மாலையிலேயே அழைப்பார்களல்லவா? அப்பொழுது என்ன செய்வது? "विरोधः कर्मणीति चेन्नानेकप्रतिपत्तेर्दर्शनात्" என்னும் பிரம்மஸூத்திரத்தில் வியாஸர் இதற்குப் பதில் கூறுகிறார். தேவர்கள் நம்மைப்போன்றவர்களில்லை. நினைத்தவாறாகவெல்லாம் செய்யும் ஆற்றல் அவர்களுக்குண்டு. பல்லாயிரவர் பக்தி சிரத்தையுடன் வகுத்தகாலத்தில் அழைத்தாலும் அத்தனை வடிவங்கள் எடுத்துக்கொண்டு எல்லோருடைய யாகங்களுக்கும் குறையில்லாமல் சென்று அருள் புரிவர் தேவர்கள். இதுதான் முடிவான பதில்.

முதல் நாள் இரவு அவர்கள் தங்கியிருப்பார்கள். அவர்களது தங்குமிடமாகிய ஆஹவனீயத்தைச்சுற்றிலும் மென்மையான தர்ப்பங் (புற்) களைத்தரையில் பரப்ப வேண்டும். இதுதான் ''உபஸ்தரணம்'' எனப்படும். மனிதர்களே, தாங்கள் கிடக்குமிடம் (மென்மையான கோரைப்பாய் முதலியவற்றால்) மறைக்கப்பட்டிருக்கவேண்டுமென்று விருப்புகின்றனர். நினைக்கும்போதே புதிது புதிதாக மாளிகைகளைத் தோற்றுவிக்க வல்லவர்களான தேவர்கள் நம்மிருப்பிடம் வந்து தங்கும்பொழுது உபஸ்தரணம் பண்ணுதற்குக் கேட்கவேணுமா? இவ்வாறு உண்மையுணர்ந்து உபஸ்தரணம் பண்ணுகிற யஜமானனுடைய இல்லத்தில் **அவனுக்குச்சமீபத்தில் தேவர்கள் வஸிக்கின்றனர்.**

இங்கு ''அவனுக்குச்சமீபத்தில்'' என்பதில் உட்கருத்து ஒன்றுளது. யாகத்தின் முதல்நாள் இரவு தேவர்களைத் தனது இருப்பிடத்தில் வரவழைத்துத் தங்கச்செய்துவிட்டு, யஜமானன் தனது வழக்கம்போல் உணவு உட்கொண்டு மனைவிமக்களுடன் படுக்கையறையில் பஞ்சணையில் துயில்கொள்ளக்கூடாது. யாகம் முடியும் வரையில் விரதம் பூண்டொழுகவேண்டும். ஆஹவனீயாக்கினியின் சமீபத்தில் அல்லது கார்ஹபத்யம் எனப்படும் அக்கினியின் சமீபத்தில், தன் அழைப்பிற்கிணங்கி வந்தருளிய தேவர்களையே (அதற்கென விதிக்கப்பட்ட) மந்திரங்களால் தியானம் செய்துகொண்டு பிரம்மசர்யத்துடன் தரையிலேயே கிடக்கவேண்டும். அதனால்தான் அங்கிருக்கும் தேவர்கள் யஜமானனுக்குச் சமீபத்தில் வஸிப்பதாகக் கூறப்படுகின்றது. தேவர்கள் யஜமானனுக்குச் சமீபத்தில் வஸிக்கின்றார்களாயின், யஜமானனும் தேவர்களுக்குச் சமீபத்தில் தான் வஸிக்கின்றான். அதாவது தேவர்கள் பண்ணும் உபவாஸத்தை யஜமானனும் பண்ணுகின்றானென்றவாறு.

இந்நிலையில் யஜமானனுடைய இராச்சாப்பாட்டு விஷயம் நினைவிற்கு வருகின்றது. யாகத்தின் முதல்நாள் தேவர்கள் யாவரும் அழைப்பிற்கிணங்கி யஜமானனுடைய வீட்டில் குழுமியிருக்கும்போது அவர்களுடன் ஒரே இடத்தில் அண்மையில் அமர்ந்திருக்கும் யஜமானன் மாலையுணவு அருந்துவதா? அல்லது பட்டினி கிடப்பதா? உணவு உட்கொள்வதாயின் எவ்வகையான உணவை உட்கொள்வது? என்னும் பிரச்னைகள் கிளம்புகின்றன.

''तदुहाषाढः सावयसोऽनशनमेव व्रतं मेने''

(சுக்லயஜுர், சதபதப்ரா. 1-1-1-7)

ஸவயஸ் என்பவருடைய புதல்வரான அஷாடர் என்னும் மாமுனிவர், ஒருவகையான உணவும் உட்கொள்ளாமல் பட்டினி கிடப்பதுதான் விரதத்திற்கேற்றது என்றெண்ணினார். அதற்கு அவர் கூறும் காரணம்:— ''தேவர்கள் மனிதனுடைய மனதையறியும் வல்லமை பெற்றவர்கள். தங்களையழைத்து

விரதம் பூண்டுள்ள யஜமானன், நாளை காலையில் நம்மைக்குறித்து யாகம் செய்யப்போகின்றான் என்பதை அவர்களறிவர். அதற்காக அவர்கள் அன்னவரும் யஜமானனுடைய வீட்டில் வந்து குழுமியிருக்கின்றனர். அவ்வாறு தேவர்கள் உபவாஸம் செய்வதனால், அந்நாள் (யாகத்திற்கு முன்தினப்) "உபவஸதம்" (उपवसथः) என்றழைக்கப்படும்.

> "तन्वै वानवक्लृप्तम् । यो मनुष्येष्वनश्नत्सु पूर्वोऽश्नीयात् । अथकिमु यो देवेष्वनश्नत्सु पूर्वोऽश्नीयात् । तस्मादु नैवाश्नीयात् ।
>
> (சுக்ல யஜுர். சதபத. 1—1—1—8)

"(தன் வீட்டிற்கு வந்துள்ள) மானிடர்கள் உண்ணாதிருக்கையில் (வீட்டுக்காரன்) அவர்களுக்கு முன் உண்பதே மிகவும் அருவருக்கத்தக்கதாகின்றது. தேவர்களே வந்து *உண்ணாமலிருக்கையில் ஒருவன் முன்னால் உணவருந்தக்கூடாதென்று சொல்லவும் வேண்டுமா ? ஆதலின் (யஜமானன்) ஆகாரம் ஒன்றும் ஏற்காமல் பட்டினியாகவே கிடக்கவேண்டும்" என்பது. இதுவே மேற்கூறிய வாக்யங்களின் கருத்து.

இவ்விடத்தில் யாஜ்ஞவல்க்யர் என்னும் மற்றொரு முனிவரின் கருத்து வேற்றுமைப்படுகின்றது.

> "तदुहोवाच याज्ञवल्क्यः, यदि नाश्नाति पितृदेवत्यो भवति । यद्यु अश्नाति देवानत्यश्नातीति; स यदेवाशितमनशितं तदश्नीयादिति, यस्य वै हविर्न गृह्णन्ति तदशितमनशितं स यदश्नाति तेनापितृदेवत्यो भवति, यद्यु तदश्नाति यस्य हविर्न गृह्णन्ति तेनो देवान्नात्यश्नाति ।
>
> (சுக்ல யஜுர், சதபத. 1—1—1—9)

"உணவை அறவே ஒழித்து முழுப்பட்டினியாக இருந்தால் பித்ருக்களை வழிபடுகின்றவனாவான். (தேவர்களை வழிபடுகின்றவனாகமாட்டான். ஏனெனில், பித்ருக்கள்தான் தங்களைப் பூஜிக்க வருபவன் முழுப்பட்டினியாக இருக்கவேண்டுமென்று விரும்புகின்றனர்.) அதற்காக உணவு உட்கொள்வானாகில், தேவர்களை மீறி உண்பவனாவான். இதற்கொரு பரிகாரம் உண்டு. சில பொருள்களை உண்டாலும் உண்ணாததாகவே கருதப்படும். அவ்வகையானவற்றை உண்ண வேண்டும். மறுநாள் யாகத்தில் தேவர்களுக்காக அவியுணவாக அளிக்கப்பட வேண்டியதைத் தவிர மற்ற உணவை உண்ணலாம். அதை உண்டாலும் உண்ணாததற்கொப்பாகும். இப்பொழுது பித்ருக்களைப் பூஜிப்பவனாகமாட்டான். முழுப்பட்டினி கிடக்கவில்லையல்லவா ? தேவர்களை மீறி உண்பவனாகவும் மாட்டான். அவர்களுக்களிக்கப்படவிருக்கும் உணவை உண்ணவில்லையல்லவா ?

* தேவர்களையும் உண்பித்துத் தானும் உண்ணலாமே. ஏன் பட்டினி கிடக்க வேண்டும்? என்று கேட்கலாம். மறுநாள் காலையில் செய்யப்படவிருக்கும் யாகத்தில் தான் தேவர்களுக்கு உணவளிக்கமுடியும். முதல்நாள் இரவு அது செய்யமுடியாது.

அத்தகைய உணவு யாது ?

“स वा आरण्यमेवाश्नीयात्, या वा आरण्या ओषधयो यद्वा वृक्ष्यम्।

(சதபத. 1—1—1—10)

காடுகளில் கிடைக்கும் பொருளை உண்ணலாம். (நாட்டுப் புறத்து உணவாகிய நெல்-யவம்-பால்-தயிர்-நெய் முதலியவை மறுநாள் தேவர்களுக்களிக்க வேண்டியவை.) கிழங்குகள்-பழங்கள் முதலியவையே அவையாம் காட்டிலுள்ள ஓஷதிகளையும் உண்ணலாம். அல்லது மரங்களில் உற்பத்தியாகின்ற காய்கனிகளையும் உண்ணலாம். (இவற்றை உண்பதனால் குற்றமில்லை)

*வேற்றுணவை உண்பது குற்றமில்லை என்பதற்கு ஒரு முனிவரின் அனுஷ்டானம் ஆதாரமாகக் கூறப்படுகின்றது.

“तदु हस्माहापि वर्कुर्वार्ष्णो माषान्मे पचत! न वा एतेषां हविर्गृह्णन्तीति।”

(சதபத. 1—1—1—10)

‘வ்ருஷா—என்னும் முனிவருடைய புதல்வராகிய “வர்க்கு” என்பவர் இதையே சொல்லுவார் :- எனக்கு (யாகத்தின் முதல் நாள்) உளுந்து உணவைச் சமைத்துப் போடுங்கள்! ஏனெனில், மறுதினம் தேவர்களுக்கு இவற்றை (ஹவிஸ்ஸாக) அளிக்கப்போவதில்லை” என்று.

மாற்றுணவை உண்ணலாம் என்கிறவளவில்தான் ஷை முனிவரின் அனுஷ்டானம் ஆதாரமாக ஏற்கப்பட்டது. ஆனால் யாகத்தின் முதல்நாள் உளுந்து உணவு கூடாது :—

“तदु तथा न कुर्यात् व्रीहियवयोर्वा एतदुपजं यच्छमीधान्यं तद्व्रीहियवावेवैतेन भूयांसौ करोति तस्मादारण्यमेवाश्नीयात्”

(சதபத. 1—1—1—10)

“அவ்வாறு செய்யக்கூடாது. உளுந்து முதலிய சமீதானியம் நெல்-யவம், இவற்றை அதிகப்படுத்துகின்றதல்லவா? அதனால் காட்டு உணவையே உண்ணவேண்டும்” என்பது கருத்து. தோசை-இட்லி முதலியவற்றிற்காக அரிசிமாவு கரைக்கும்போது உளுந்தும் அரைத்துக்கரைக்கப்படுகின்றது. அதனால் சில நாழிகைகள் கழிந்ததும் ஷை மாவு பொங்கி வரும். இவ்வாறான தொடர்பு உளுந்துக்கும் அரிசிக்கும் உள்ளபடியால், அரிசியைத் தவிர்க்கவேண்டிய நிலையில் உளுந்தையும் உபயோகிக்கக்கூடாது என்று தடுக்கின்றது வேதம்.

“यदनाश्वानुपवसेत् क्षोधुकः स्यात्” (தைத். ஸம். 1—6—7)

“உணவை அறவே விலக்கிவிட்டு உபவாஸம் இருப்பானாகில், பசியினால் வாட்டமடைந்து விடுவான்”.

---

* இதுவே முடிவான கொள்கை.

"अपोऽश्नाति तन्नेवाशितं नेवानशितं" (தைத். ஸம். 1—6—7)

"(அதற்காக) நீரையே உணவாகச் (நீராகாரம்) செய்துகொள்ள வேண்டும். அது உண்டாற்போலவும் உண்ணாததுபோலவும் ஆகும் உண்பதனாலுண்டாகும் குற்றம் இராது, உண்ணாமையினால் ஏற்படும் சோர்வும் தவிர்க்கப்படும்" என்றவாறு.

இராமாயணத்தில், முடிசூட்டு விழா மறுநாள் காலையில் நடக்க விருக்கையில் முதல் நாள் இரவு, தசரதனுடைய உத்தரவின்மேல், வஸிஷ்ட முனிவர் இராமனுடைய விடுதிக்குச் சென்று இராமனுக்கும் சீதைக்கும் உபவாஸம் செய்து வைத்ததாகக் கூறப்படுகின்றது.

उपवासं भवानद्य करोतु सह सीतया ।
प्रातस्त्वा मभिषेक्ता हि यौवराज्ये महीपतिः ॥

(இராமா. அயோ. 5—9—10)

ஸுந்தர காண்டத்தில் அனுமான் சீதாதேவியைக்காண்கையில், உபவாஸத்தினால் மெலிந்த நிலையில் பெருமூச் செறிந்துகொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

"उपवासकृशां दीनां निःश्वसन्तीं पुनःपुनः"

(ஸு. 15—18)

அயோத்தியாகாண்டத்தில் இராமலக்ஷ்மணர்களும் சீதையும் கானகத்திற்கேகிய முதல்நாளிரவு தண்ணீரையே உணவாகக்கொண்டு உபவாஸம் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

"अद्भिरेव तु सौमित्रे वत्स्याम्यद्य निशामिमाम्"

(அயோ. 46—10)

இராமாயணமும் வேதத்தின் விவரணமேயல்லவா?

"उभावग्नी उपस्तृणते । देवता उपवसन्तु मे ।
अहं ग्राम्यानुपवसामि । मह्यं गोपतये पशून् ॥"

(தைத். ப்ரா. 3—7—4)

என்னும் வேதவாக்கியம்" இரண்டு அக்கினிகளையும் (சுற்றி) தர்ப்பங்களால் பரப்புகின்ற என்பொருட்டு தேவர்கள் **உபவாஸம்** செய்யட்டும். நான் நாட்டு மிருகங்களை உண்ணாமல் **உபவாஸம்** செய்கின்றேன்" என்னும் கருத்துள்ளது. இங்கு, தேவர்கள் செய்யவேண்டுவதாகக் கூறப்படும் உபவாஸம், உண்ணாமல் யஜமானனுடைய சமீபத்தில் வாஸம் செய்தல். யஜமானன் செய்யும் உபவாஸமும் உணவில்லாமல் அவர்களுடைய சமீபத்தில் வஸித்தலேயாம். இதில் உண்ணாமல் இருக்கும் பாகத்தையே பிற்காலத்தவர்கள் "உபவாஸம்" என்னும் சொல்லுக்கு முக்கியமான பொருளாகக்கொண்டுவிட்டனர். உண்மையுணர்ந்த

அறிவாளிகள்; தெய்வ வழிபாட்டுக்காகவே இச்சொல் தோன்றியதென்பதையும் விரத நாட்களில் தெய்விகமான தன்மை மனிதனிடம் தோன்றுவதற்காகவே இம்முறை வகுக்கப்பட்டதென்பதையும் நன்குணர்ந்து ஒழுகுகின்றனர். ஏகாதசி உபவாஸம், கிருத்திகை உபவாஸம், சனிக்கிழமை உபவாஸம், என்பன போன்ற ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் ஒவ்வொரு தெய்வத்தின் தொடர்பு இருப்பதைக் காணலாம்.

இவ்வளவு புனிதமான உபவாஸம் தற்காலத்தில் அதன் பொருளைவிட்டு வெகுதூரம் விலகிச்சென்றுவிட்டது. அதன் உட்கருத்து தேய்ந்து மறைந்து கொண்டு வருகின்றது. உபவாச நாட்களில், தகுதியற்றதாகக் கழிக்கப்பட்ட உளுந்துதான் தோசை-இட்லி-முதலியவற்றுடன் பிணைந்து முக்கியமான உணவாகிவிட்டது. தினந்தோறும் சோறு தின்று அலுத்துப்போன நிலையில், ருசிகரமான பலகார வகைகளை நினைக்கும்போதே நாவில் ஜலம் ஊறுகின்றது. அளவுக்கதிகமாகவே தலையணையில் பஞ்சுபோல் உணவு திணிக்கப்படுகின்றது. ' கனிகளையே உண்ணுதல்'' என்னும் பொருளுள்ள ''பலாகாரம்'' என்னும் சொல்லும் ''உபவாஸ''த்துக்குத் தோள்தீண்டியாய்ப் ''பலகார''மான உணவு வகைகளை புணர்த்தும் சக்தி பெற்றுவிட்டது. இம்மட்டோ?

''न पिबेयं न खादेयं प्रत्यहं मम भोजनम्।
एष मे जीवितस्यान्तो रामो यद्यभिषिच्यते ॥''

(இரா. ஸ. கா. 33–21)

''இராமனுக்கு முடி சூட்டுவிழா நடக்குமாயின், (நான்) நீர் அருந்தாமல் உணவும் உண்ணாமல் உயிரை விடுவேன்' என்று கைகேசி பயமுறுத்தியதுபோல் சண்டித்தனம் செய்வதற்கெல்லாம்கூட இதுவே பெயராகிறது. ''தப்பியோடிய மீன் தருமத்திற்காகட்டும்'' என்கிற வகையில் உணவுப்பஞ்சத்தினால் பட்டினி கிடப்பவர்கள்கூட உபவாஸம் இருந்ததாக கூறப்படுவது சகஜமாகிவிட்டது. புனிதமான நோன்புகள் நோற்பதற்கு, முதன்முதலில் மேற்கொள்ளவேண்டிய நியமங்களுள் உபவாஸமும் ஒன்றும். ஆண்டாள் அருளிய திருப்பாவையில்,

'' வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி யுகந்தேலோரெம்பாவாய்'' (திருப்பாவை—2)

என்னும் பாசுரத்தில், மேலேகாட்டிய வேதங்களின் உட்கருத்து பதிந்திருப்பதை நன்கு காணலாம். நம் நாட்டு மக்கள் அனைவரும் இக்கட்டுரையை ஊன்றிப் படித்து, உண்மையுணர்ந்து நலனுறவேண்டுமென்பது எமது அவா. அதனால் இக்கட்டுரையின் சாராம்சத்தை முடிவில் சுருக்கமாக எழுதுகிறோம்:—

(1) உபவாசம்—சமீபத்தில் வசித்தல். இங்கு, வழிபடவிருக்கும் தெய்வத்தின் சமீபத்தில் வசித்தலையுணர்த்தும்.

(2) அருகில் வசிக்கும் தேவர்கள்போல் வழிபடுபவனும் உணவின்றி இருப்பதனால், இச்சொல்லுக்கு அதுவும் பொருளாயிற்று.

(3) வழிபடவேண்டியவர்கள் பித்ருக்களாயிருந்தால், வழிபடுவோன் அறவே உணவை விலக்கிவிடவேண்டும் (சடங்கு முடியும்வரை). ஏனெனில், அதையே பித்ருக்கள் விரும்புகின்றனர்.

(4) மற்ற தேவர்களை வழிபடும்போது இவ்வளவு கடுமையில்லை. ஏதாவது வேறு உணவு உண்ணலாம். ஆனால், மறுநாள் தேவர்களுக்கு அளிக்கப் படவிருக்கும் உணவு வகையைச் சார்ந்த பொருள் கண்டிப்பாய் விலக்கப்பட வேண்டும்.

(5) இதிலும் பல வகைகளுண்டு. நீராகாரம் அருந்தலாம். காய் கனிகளைப் புசிக்கலாம். ஆனால் உளுந்து, கொள்ளு, பயறு இவைபோன்ற அதிக ஸத்துள்ளவை கூடாது.

(6) உபவாஸ காலத்தில், உத்தேசத்திலுள்ள தெய்வத்தின் நினைவு நிலைத்திருக்கவேண்டும். பிரம்மசர்யம் மிக அவசியம். தனியாகவோ, குழாங்களாகவோ, பஜனை, தோத்திரம், மந்திர ஜபம், மற்ற பணிவிடைகள் இவற்றில் ஏதேனுமொன்றைச் செய்தல் நன்றாம்.

(7) மறுநாள் உத்தேசித்தபடி வழிபாடு முடிந்ததும், ஸாத்விகமான (புளிப்பு—காரம் இவையில்லாத) உணவு உண்ணவேண்டும். இதுவே 'பாரணம்' என்பது. (விரதம் பூர்த்தியாகிக் கரைசேர்தல் அல்லது உண்டல் என்பது இதன் பொருள்.)

(8) பக்தி சிரத்தையுடன் இவ்வாறு விரதமிருப்பதனால் இறைவனது திருவருள் நிரம்பப்பெற்று தெய்வத்தன்மையடைவது மட்டுமல்லாமல் சிறந்த தேகாரோக்கியத்தையும் பெறலாம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருக்கோவையாரிற் கண்ட திருக்கோயில்கள் 1

"எப்போ தகந்து நினைவார்க் கிடரில்லைக்
கைப்போ தகத்தின் கழல்."

"வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண் டில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவிபாடிச் சிரிப்பிப்பரே.
(நம்பியாண்டார் நம்பிகள்)

பல்காற் பழகினுந் தெரியா வுளவேற்
றொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கும் ஆண்டினும் இலையேல்
வடமொழி வெளிபெற வழங்கும் என்ப. (சுவாமிநாத தேசிகர்)

எழுதரு மறைகடேறா விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண் மூழ்கி
அழுதடி யடைந்த வன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.
(பரஞ்சோதி முனிவர்)

இங்ஙனம், பலவாறாகச் சிறப்பித் தோதப்பெறும் மணிவாசகப் பெருந்தகையார், திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் திருக்கோவையார் என்னும், இவ்விரு பெரு நூல்களும் எட்டாந் திருமுறையாக வைத்து எண்ணப்பட்டு வருகின்றன. தில்லை பாதி, திருவாசகம் பாதி யெனவும், பிள்ளை பாதி பெரிய புராணம் பாதி யெனவும் பழமொழிகள் பகரப்பெறுகின்றன.

திருக்கோவையாரோ தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள இன்பக் கூத்தனைத் தலைவனாக்கொண்டு மிளிர்வது. இந் நூற்கு, ஆதிக்கோவை, திருச்சிற்றம்பலக்கோவை, திருக்கோவையார் எனப் பல பெயரிட்டு வழங்குவதுண்டு. தஞ்சைவாணன்கோவை, பழமலைக்கோவை, துறைசைக்கோவை, காழிக்கோவை, மயூரகிரிக்கோவை, ஆரூர்க்கோவை, குலோத்துங்கன்கோவை, கோடீச்சுரக்கோவை, உசிதன்கோவை, வெங்கைக்கோவை முதலியனவனைத்தும் ஒவ்வொரு வகையிற் சிறப்புடைத்தாக இலகுகின்றது.

திரு, என்னும் அடைமொழி பொருளுறு மொழியாகவுள்ளது. திருவென்பது, கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் எனப் பேராசிரியர் பொருள் உரைப்பர். கோவையெனும் நூலானது வித்தார கவியாற் பாடப் பெறும் தொண்ணூற்றுறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இவை சிறுகாப்பியத் தின்பாற் படுவன. இக்கோவை அகப்பொருள்பற்றி யுரைப்பது. சிற்றின்பம் பற்றி யுரைப்பினும் பேரின்பக் கிளவியாகக்கொண்டு பொருள் காண்கின்றனர். திருக்கோவையாருண்மையெனு நூலானது அப்பொருளை யறிவுறுக்கும். அகம் என்பது இன்பம் என்னும் பொருட்டாகும். உலகில் காணப்படும் உயிர்ப் பொருள் இயங்கியற் பொருளும், நிலையியற் பொருளுமாக இருவகையினை யுடைத்தாம் உயிர்ப் பொருளனைத்து முணர்வுவகையால் அறுவகையினை யுடைத்து. இவ்வறுவகையினும் மேம்பட்டு விளங்குவது ஆறறிவுடைய மக்கட் பிறப்பேயாம். இம்மக்கட் பிறப்பினருக்குரியன அறனும், பொருளும், இன்பமும் வீடும் ஆகிய நான்குமேயாம். இதனைப் புருடார்த்தம் என்பர் வடநூலார். காதலிருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே யின்பம் என்பது ஔவையார் வாக்காகும். இவ்வின்பத்தினைச் சிற்றின்பம் பேரின்பம் என விருவகைப் படுப்பதுண்டு. சிற்றின்ப வாயிலாகப் பேரின்பம் எய்தல் நெறி யென்பர் நூலோர். இன்பமானது, உடலும் உயிரும் ஒரு பருவத்தில் துய்க்கப் பெறுவது. உடலுமுயிரும் ஒன்றுபட்டிருப்பதால் உணர்வுறுகின்றது. அவ் வுணர்வு மெய், வாய், கண், மூக்கு, செவி வழியாகச் சென்று கண்டு கேட்டுண் டுயிர்த்துற்றறியும் பெற்றித்தாம். சிறுமை இன்பம் சிற்றின்பம். பெருமை யின்பம் பேரின்பம். சிற்றின்பம் அழிவுடையது. பேரின்பம் அழியாமை யுடையது. வள்ளுவனாரும் குற்றங்கடிதல் எனும் அதிகாரத்திடை

> "செருக்கும் சினமும் சிறுமையு மில்லார்
> பெருக்கம் பெருமித நீர்த்து"

என்னுங் குறட்பாவில் சிற்றின்பமாகிய காமத்தினைச் சிறுமையெனச் செப்பிப் போந்தனர். பேரின்பத்தினை, 'ஆராவியற்கை யவா நீப்பின் அந்நெறியே, பேராவியற்கை தரும்' எனப் பேசினர். ஆகவே, பேரின்பம் என்றுமொரு படித்தாய் அழியாது நுகரப்பெறுவது.

> "மாசில் வீணையும் மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
> மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
> ஈச னெந்தை யிணையடி நீழலே"

என்பது அப்பர் அருள் வாக்கன்றோ! இணையடி நீழல் ஐம்புலன்களும் அழியா நிலையில் ஆரத்துய்க்கும் பேராவியற்கையாயிற்று என்பது பொருளாகப் போந்தமை சிந்திக்கற்பாலது.

மண்ணின்மேல், கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுளவென்று — பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்.

என்பது 11-ந் திருமுறை. ஆகவே சிற்றின்பம் இல்லறவாழ்விற்கும், பேரின்பம் துறவற வாழ்விற்கும் ஆம் என வள்ளுவர் வாய்மொழி வகுத்துக்காட்டியுளது.

சிற்றின்பம் அழிவுடைத்து, பேரின்பமோ அழியாமையுடைத்து எனக் கலைஞர் கழறுவர். குலம், குணம், குடி, நலம், அகவை (ஆண்டு) முதலிய ஒத்த தலைவனும் தலைவியும் தம்முள் ஒத்துக்கூடியின்புறலே இன்பம் என இயனூல் இயம்பாநிற்கும். வள்ளுவரும் காமத்துப்பாலாகிய இன்பப்பகுதியினை யெடுத்தியம்பும் பெற்றியென்னே. உடலும் உயிரும் ஒருபெற்றித்தாவுற்று வாழ்வதில்லை. உடலார் அழிவர். உயிரார் அழியார். அழிவுடைமையுடைய உடலுடன் அழியாமையுடைய உயிரார் ஒன்றித்து வாழ்வது இருளும் ஒளியும் ஒன்றுபட்டிருப்பது போலாம். உயிர் உணர்வுடையது. உடல் உணர்வற்றது உடலுக்குணர்வுறுவதுதான் உணர்வுறுமுயிர் ஒன்றுபட்டிருத்தலால் ஆவது. உயிர் நீங்கிய உடல் பிணம் எனப் பேசப்பெறுகின்றது. சில நாழிகை செல்லுமாயின் நாற்றமுறும். அதுகாலே பிணநாற்றமெனப் பெரிதும் இழித்துரைக்கப்படுகின்றது. சத்தாவுள்ள வுயிர் அசத்தாவுள்ள வுடலுடன் ஒன்றிவாழ்வதென்பது எண்மையுடைத்தன்றும். உடலுயிரைப்பற்றிப் பெரியோர் பின்வருமாறுரைத்தலையாராய்தல் வேண்டும்.

திருநேரிசை.

"கால்கொடுத் திருகையேற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிரநீராற் சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்வுடைத் தாவமைத்தங் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவிவைத்தார் மாமறைக் காடனாரே" (அப்பர்)

"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்." (மணிமேகலை)

இத்தன்மைத்தாகிய உடலோடு, உயிர் வினைகளின் வயத்தால் இறந்து பிறந்து சுவர்க்க நரகங்கள் புக்கு ஆண்டுறும் இன்பத் துன்பங்களைத் துய்த்துக்கொள்ளி

வட்டமும் காற்றாடியும் போலச் சுழன்றுகொண்டு வருகின்றது. இறைவன், இருள் சேர் இருவினையுஞ் சேரா வியல்பினன், பிறப்பிறப்பற்றவன். தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல் முதலிய எண்குணங்களுடையவன். எட்டுக் குணங்களுடைய இறைவன், அருவனாய், உருவனாய், அருவுருவனாய் நின்றுயிர்கட்கு, அருள் புரிவன். இவ்விறைவன், அக்கினியிற் சூடுபோலத் தன்னோடு பிரிவிலாத அருட் சத்தியாகிய அம்மையினோடு, ஆக்கலாதியருட் செயல்களை யாற்றிக்கொண்டு வருகின்றான். இத்தொழில்களைப் பஞ்சகிருத்தியங்கள் எனப் பேசப்பெறும்.

"வேதாந்த மேதெளிந்த சைவ விழுப்பொருளாய்
நாதாந்த மேயாய் நடிக்கின்றான்." நம்பன். இக்கூத்தினை

அருட்கூத்து, ஞானக்கூத்து, ஆனந்தக்கூத்து, இன்பக்கூத்து எனப் பலவாறாகப் பகுத்துரைப்பர். இக்கூத்தப் பெருமான், உருவநிலையில், மகேசுரர் எனவழைக்கப்பெறுவர். இருபத்தைந்து எழிலுருவங்களில் ஒன்றாக வைத்து வழங்கிடவும் பெறுவர். ஆனால் இத்தில்லைப்பிரான் அருவுருவத்திருமேனி கொண்ட சதாசிவ வடிவின்கண்ணும், பரவிந்து பரநாத தத்துவத்திலும் விரவி, அருவத்தின் கண்ணும் நின்றருள்பவர். மூவருக்கரந்த மூவா முதல்வன் என அருங்கலையறிஞர் ஆர்ப்போடழைப்பர். ஆகவே இப்பெருமானுடைய அருட்கலையே எல்லாச் சிவாலயங்களினுஞ் சென்றுலாவி, அர்த்த யாமத்திற் பூரணமாய்ப் புலியூரில் ஒன்றுகின்றதென்பர். பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவருள் ஒருவராய் விளங்கிய தில்லைவிடங்கன் மகாவித்துவான் மாரிமுத்துப்பிள்ளையவர் தாம் பாடிய புலியூர் வெண்பாவென்னும் பிரபந்தத்தில்,

ஓர்கலை யெங்கெங்கும் உலாவியார்த்த யாமத்திற்
பூரணமா யொன்றும் புலியூரே. எனவருஞ் செய்யுள்

தெரிவியா நிற்கும். இப்பெருமானாகிய பரமான்வைத் தலைவனாகவும் திருவாசகம் பாடியருளிய பெரியாராகிய திருவாதவூரடிகள் தன்னைத் தலைவியாகவும் கொண்டு அகப்பொருட்டுறை நானூறும் தழுவக் கட்டளைக்கலித்துறைச் செய்யுளான் பாடப்பெற்ற நூலே திருக்கோவையார் என்பதாகும். திருக்கோவையாருண்மை யெனப் பேரின்பக்கிளவி தழுவிய நூலுமொன்றுண்டு. இஃதச்சிடப்பட்டுள்ளது. திருக்கோவையார் அகப்பொருளையும், உண்மையாகிய புறப்பொருளையும் பற்றியனவாகும். என்பது நன்காய்ந்து தெரிந்து கோடற்பாலதாகும். இனித் திருக்கோவையார், சிற்றின்பக் கிளவிகளைக் கூறுந்திறம்பற்றியாய்வோம். இயற்கைப் புணர்ச்சி முதல் பரத்தைபிரிவு ஈறாக இருபத்தைந்து கிளவிகளைக் கிளந்து ஒவ்வொன்றற்கும் பலதுறைகளாக முடிவில் நானூறு துறைகளையுடைத்தாய் மிளிர்கின்றது.

தொல்காப்பியம் முதலிய பேரியல் நூல்கள் அறம் பொருள் இன்பு வீடெனும் நாற்பொருள்களையும், அகப்பொருள் புறப்பொருள் எனும் இரு பொருளினுளடக்கிக்கூறும். புறத்தில் அறனும் பொருளும் அகத்தில் இன்பமும் அடங்கும். வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து. ஆகலின் நூல்களால் நுவலப்படுவன மூன்றென வரையறை செய்துள்ளனர். நன்னூலார் வீடடைதல் என்றார். பேரின்பமாகிய சாத்தியம் என வுரைகாரர் உரை கூறினர். சாதனத்தாலடைவது சாத்தியம், சாதனம் யாதோவெனின் பற்றுள்ளம் விடுதலாகிய துறவறமே யென்க. ஆகவே வீட்டிற் இயல் இயம்பாது வீடடைதற் குரிய காரணம் கூறலே நூல்கள் மரபாம்.

பண்டைக் காலத்துத் தண்டமிழ் இலக்கண நூல்கள் ஒழுக்கத்தினை அகம் புறம் என இரண்டாகக்கொண்டு அகவொழுக்கத்திற்கு எழுதிணையும் புறவொழுக்கத்திற்கு எழுதிணையும் ஆக வகுத்து விரித்துரைக்கும். அவையாவன:— கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை யென்பனவாம். இவற்றிற்குப் புறமாவன, வெட்சி, வஞ்சி, உழிஞை தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பனவாம். இவற்றிற்கு மறுதலையாவன, கரந்தை, நொச்சி, கைக்கிளை பெருந்திணை முதலி யனவாம். இவ்வெழுதிணைக்கும் மணங்கள் எட்டு வகையினவாம். அவ்வெட்டு வகையினுள், யாழோர் கூட்டத்தியல்பினதாகிய கந்தருவமணத்தினை அன்புடைக் காமமாகிய ஐந்திணையின் கண்ணும், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்னு நான்கினையும் பெருந்திணைக்கண்ணும், அசுரம் இராக்கதம், பைசாசம் என்னும் மூவகை மணத்தினையும் கைக்கிளைத்திணைக்கண்ணும் வைத்துக்கூறும் மரபு மிகபோற்றற்பாலதாகும். கோவை—கோத்தல் அஃதாவது ஒன்றோடொன்று முறையாக நிரல்படுத்தியிடல். கிளவி — கிளத்தல், மொழிதல், துறை ஒரு நெறி யொழுகல், யாற்றின்கண் மக்களாயினர் நீர் பருகற்கு இறங்கும்துறை போறலின் துறையெனப் பெயர் பெற்றதென்பர்.

நாற்கவிராயநம்பியகப் பொருளுக்குத் தஞ்சைவாணன் கோவையும், மாறனகப்பொருளுக்கு மாறன் கோவையும், இறையனார் கிளவியலுக்கு உசிதன் கோவையும் அமையப்பெற்றுள்ளன, இத்தெய்வத்தன்மை பொருந்திய திருக் கோவையாருக்குத் தொல்காப்பியப் பேரியல் அகப்பொருள் போலும் இக்கோவை யாரிற் கிளக்கப்பெறு கிளவித்தொகை வருமாறு :—

அதிகாரம் : இயற்கை பாங்கன் இடந்தலை மதியுடன்
இருவரு முள்வழி அவன்வர வுணர்தல்
முன்னுற வுணர்தல் குறைபுற வுணர்தல்
நன்னிலை நாண நடுங்க நாடல்
மடல்குறை நயப்பு வழிச்சேட் படுத்தல்

இடமிகு பகற்குறி இரவுக் குறியோடு
ஒருவழித் தணத்தல் உடன்கொண் டேகல்
வரைவு முடுக்கம் வரைபொருட் பிரிதல்
மணஞ்சிறப் போதல் வார்புவி காவல்
இணங்கலர்ப் பொருத்தல் வேந்தற் குற்றுழி
பொருள்வயிற் பிரிதல் பரத்தையிற் பிரிதலென் (று)
அருள்வயிற் சிறந்த அகத்திணை மருங்கின்
இருளறு நிகழ்ச்சி யிவையென மொழிப — என்பது சூத்திரம்.

இதன் பொருள் :— (1) இயற்கைப் புணர்ச்சி (2) பாங்கற் கூட்டம் (3) இடந்தலைப்பாடு (4) மதியுடன் படுத்தல் (5) இருவரும் உள்வழி அவன் வரவுணர்த்தல் (6) முன்னுறவுணர்தல் (7) குறையுறவுணர்தல் (8) நாண நாட்டம் (9) நடுங்க நாட்டம் (10) மடல் (11) குறைநயப்பித்தல் (12) சேட்படை (13) பகற்குறி (14) இரவுக்குறி (15) ஒருவழித்தணத்தல் (16) உடன் போக்கு (17) வரைவு முடுக்கம் (18) வரைபொருட் பிரிதல் (19) மணஞ் சிறப்புரைத்தல் (20) ஓதற்பிரிதல் (21) காவற் பிரிதல் (22) பகை தணி வினைப்பிரிதல் (23) வேந்தற் குற்றுழிப் பிரிதல் (24) பொருள் வயிற் பிரிதல் (25) பரத்தையிற் பிரிதல் என இவ்விருபத்தைந்தும் இந்நூற்கிளவிக்கொத்தென் றுரைக்கப்படும். இவையே அதிகாரங்களாகும். இஃது, அகத்திணையிலக்கணம் வல்லாரனைவரும் கூற்றும். இவ்வொழுக்கம், களவு ஒழுக்கம், கற்பு ஒழுக்கம் என விருவகைத்தாம். இதுவே தொன்றுதொட்டு வரும் மரபு. திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் இத்திருக்கோவையார் எதனைக் கருதிப் பாடினர் என்பது பின்வரும் பாடல் அறிவிக்கும். அப்பாடல் வருமாறு :—

"அறிவோன் அறிவில தெனவிரண் டாகும்
நெறியினிற் றொகைபெற்று நிரல்படவிரிந்த
மண்புன லனல்வளி மாவிசும் பெனூஅ
எண்வகை நிலைஇய வெவ்வகைப் பொருளும்
தோற்றநிலை யிறுதி கட்டுவீ டென்னும்
மாற்றருஞ் செயல்வழி மாறாது செயப்பட்டு
வெருவா வுள்ளத்து வேட்போன் றன்செய்
இருவினைப் பயின்றுய்த்து மும்மல னொரீஇப்
பொருவறு சிவகதி பொற்பினிற் பொருந்தவும்
ஏனைய தத்தங் குணநிலை புணரவும்

நிலைஇ யவ்வயி னிமித்த மாகி
அலகு தவிர்த்த பலவகை யண்டமும்

மின்னுழை வெயிலின் துன்னணுப் புரைந்து
தன்னு ளடங்கவும் தானவற் றுள்ளும்
நுண்ணுணர் வாயு நோக்கரு நுழையில்
சிறுமை பெருமைக் கிருவரம் பெய்திப்
போக்கும் வரவும் புணர்வு மின்றி
ஆக்கமுங் கேடு மாதியும் அந்தமும்
நடுவு மிகந்து ஞானத் திரளாய்
அடியு முடியும் அளவா தயர்ந்து

நெடியோன் நான்முகன் நான்மறை போற்ற
எரிசுடர்க் கனலியி னீங்காது விரிசுடர்
வெப்பமும் விளக்கமு மொப்பவோர் பொழுதினிற்
றுப்புற வியற்றுவ தெனவெப் பொருளும்
காண்டலும் இயற்றலும் இயல்பா மாண்டுடன்
தன்னி னீங்காது தானவின்று விளங்கிய
எண்ணெண் கலையும் சிலம்பும் சிலம்படிப்
பண்ணமை தேமொழி பார்ப்பதி காண
ஐயா றதன்மிசை யெட்டுத் தலையிட்ட
மையில் வான்கலை மெய்யுடன் பொருந்தித்

தில்லை மூதூர்ப் பொதுவினிற் றோன்றி.
யெல்லையி லானந்த நடம்புரி கின்ற
பரம காரணன் றிருவரு ளதனால்
திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கையிகந் தறிவா யறியாச்
செம்புலச் செல்வ ராயின ராதலின்
அறிவனூற் பொருளு முலகநூல் வழக்குமென
இருபொருளு நுதலி யெடுத்துக் கொண்டனர்.
ஆங்கவ் விரண்டனுள்
ஆகமநூல் வழியி னுதலிய ஞான
யோகநுண் பொருளினை யுணர்த்துதற் கரிது
உலகநூல் வழியின் நுதலிய பொருளெனும்
அலகி றீம்பாற் பரவைக் கண்ணெம்
புலனெனுங் கொள்கலன் முகந்தவகை சிறிது
உலையா மரபி னுரைக்கற் பாற்று" என்பதாம்.

இவ்வுரைச் சூத்திரப் பொருளினைச் சிறிது ஆராய்வாம் :—

இதன் பொருள் :— உலகமானது சித்தும், அசித்தும் எனப்படும் இருநெறியினையுற்று, வரிசைப்பொருந்தி. விரிவுற்ற மண்ணும் நீரும் தீயும் காற்றும் விண்ணும் ஆகிய ஐம்பெரும் பூதங்களும், செஞ்சுடர், வெண்சுடர் இயமானன் ஆகிய மூன்றும் என்று எண்ணப்பட்ட எட்டுவகைப் பொருளும், தோன்றலும் (உண்டாதலும்) நிற்றலும், முடிவுறலும், கட்டுண்டு மறைப்புண்ணலும், கட்டு நீங்கி வீடு பேறுறலும், (படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளலின் காரியங்களிவை) எனப் பேசப்பெறும் மாற்றற்கரிய செயல்வழி (இறைவன்றான் மேற்கொளும் காரியங்களிவை) தவிராது செய்யப்பெற்று அஞ்சாவுள்ளத்து அழிவில் புருடன் (ஆன்மா) ஒரு பொருளை வெறுத்தலினாலும், விழைதலினாலும் வரும்அருவப்பட்ட வினையுருவப்பட்டு நல்வினையும்,தீவினையும் ஆகிய இருவினையின் காரியப்பாடாகிய நன்மை தீமைகளின் பயன்களைத் துய்த்து, ஆணவ கன்ம மாயா மலங்களாகிய கட்டுக்களினின்று (பந்தம்) நீங்கி (இருவினையொப்பு மலபரிபாக முற்று) உவமையில்லாத சிவசத்தியினை (வீடு பேறாகிய முத்தியின்பத்தை) (திருவடிப் பேற்றினை, அழிவில் இன்பத்தினை, என்பன வொருபொருள்) பழகியையுடைத்தா அடையவும். எண்வகையுருக்கொள் ஈசனை, எட்டுருக்கொள் அண்டத்தொடுற்ற ஆன்மா பந்தபாசத்துவக்கற்றுப் பரகதியினைப்பற்றியதனால் தன்னையநாதியே பற்றி நின்ற (அணுகி நின்ற) ஐம்பூதங்களும் இருசுடரும் தத்தம் பண்பினைப்பற்றி நிற்கவும், நிலைபெற்று ஆண்டு நிமித்தமாகி (காரணமாகி) எண்ணிக்கை நீங்கிய பல்வகையண்டங்களும் (முன்னர்க்கூறப்பட்டவை பிண்டங்களைப்பற்றியது ஈது அண்டங்களைப்பற்றியது) ஆகலின் ஒளி நுழைந்த வொளியில் துன்னிய அணுவினையொத்து. அவையனைத்தும் தனக்குள் ஒடுங்கி நிற்பவும், இறைவன்றான் அவற்றுளும் நுணுக்கரிய நுண்ணுணர்வாயும் நோக்கற்கரிய சிறுவழியில், சின்னம் சிறுமையும் பென்னம் பெருமையும், ஆகிய சிற்றுருவமும் பேருருவமும் என்னும் யெல்லையினை யெய்தி போதல், விரிதல், ஒன்றுதல், இன்றி (போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியன் ஆகலின், இங்ஙனம், இயம்பப்பட்டது) ஆதலும் அழிதலும் முதலும் முடிவும் இடைப்படலும் கடந்து நிற்றலால் அறிவுப்பிழம்பாகி அடியினையும் முடியினையும் அளக்க வறியாது அயர்வுற்று நாரணனும், நான்முகனும் நான்மறைகளும் இறைவா! என்று ஏத்த தீப்பிழம்பாகிய அக்னியைப்போல சூடும் ஒளியும்போலப் பிரியாது, விரிந்த ஒளியினையுடைய செங்கதிராகிய சூரியனுடைய வெப்பமும் விளக்கமும் ஒப்ப ஒரே சமயத்தில் (காலத்தில்) நன்றாக ஆக்கல் போலச் சித்தும் அசித்துமாகிய அனைத்துப் பொருள்களையும் திருவுள்ளத்தடைத்தலும், அதன்படியாக்கலும் இயல்பேயாகும். அதனொடும் அமையாது, அவ்விடத்தே சத்தியோடுஞ் சிவஞ் சேர்ந்திடில் எத்தொழிலும் வல்லதாம். ஆகலின் ஒளியும், பிழம்பும், தீயும், சூடும், வெயிலும் வெப்பமும், நீருந்தட்பமும், போலப்பிரிவின்றியுள்ளதாகிய வல்லமையே

(ஆற்றலே) சத்தியாம். அங்ஙனம், தன்னினின்று நீங்காமல் தன்னால் நவிலப் பெற்று விளங்கிய அறுபத்து நான்கலைகளும் ஒலிக்கும் சிலம்பணி பாதங்களை யுடைய, பண்ணமைந்த, தேன்போலு மொழியினையுடையளாகிய மதுரவாய் மொழியம்மையெனுஞ் சிவகாமசுந்தரியார் காண, முப்பதின்மேலும் எட்டு எனும் எண்கூடிய முப்பத்தெட்டுக் குற்றமில்லாத (அட்டத் திரிம்சத்கலா) கலைகளையும் நிலையுடைய திருமேனியாகக்கொண்டு (திருமேனியிற்றரிப் பித்து) நிர்மல சொரூபி யாகிய பெருமான் சொரூப வடிவோடும் தில்லைப்பெரும்பதிக்கண் உள்ள திருச் சிற்றம்பலத்தின்கண் எல்லார்க்கும் பொதுவினடமிடுகின்ற சிவமாகி நின்று அளவில் ஆனந்த தாண்டவம் புரிகின்ற மேலான உலக காரணனாகிய இறைவன் நிறையருட் பெருக்கால், திருவாதவூரின்கண், சம்புபாதாசிருதர் சிவஞானவதி யென்னும், இருமுதுகுரவர் தவத்தால் என்று மின்ப மொன்றிய செம்மை வேதம் நிரமுறுமுறையிற் பயின்ற வாதவூரடிகள் என்னும் மாணிக்கவாசக சுவாமிகள், ஐம்புலன்பால் ஐம்பொறிகள் செல்லும் செல்கையினின்று நீங்கி யறிவுமயமாய், பாச ஞான பசுஞானங்களால் அறியப்பெறாத சிவஞானச் செல்வராயினர். இதனாலன்றோ! மாணிக்கவாசகப் பெருந்தகை அறிவாற் சிவனே யென்பது திண்ணமெனச் செப்புவாராயினர் இலக்கணக் கொத்துரைகாரர். ஆகையினால் சிவஞானச் செல்வநிறைந்த ஞானிகளின் நூற்பொருளும் அல்லது, இறைவன் அருள் நூற்பொருளும், உலக வழக்கு, நூல் வழக்கு எனப்படும் இரு வழக்குப் பொருளும், கூறி மேற்கொண்டனர். அவ்விரு பொருளில் இறையருள் நூலாகிய ஆகமநூல்முறை நெறியின்கண் கூறிய ஞானப் பொருளினையும், யோகமாகிய நுண்பொருளினையும், அவ்வழி நின்று அறிதற்குரித்தாகலின், வேறு வழியான் அறிவித்தற்கு அருமையுடைத்து. (நாலடியாரும், அறிவு நூல் உலக நூல் என விருவகைப்படுத்துரைக்கும்.) ஆகவே, உலகியல் நடைபெறற்குரிய நெறியினை யெடுத்துரைக்கும் உலக நூல் நெறியின்கண் உரைக்கப்பட்ட பொருள் எனப் பெறும், அளவில்லாத இனிய பாற்கடற்கண் எம் அறிவெனும் முகக்குங் கருவி முகந்த வகையில் ஓரளவு சுருங்காத முறையின் நெறிப்படுத்துரைக்கற்பாலது என்பதாம். உலகின்கண் ஆறறிவுற்ற மக்கட் சாதியினர்க் குறுதியெனவுயர்ந் தோரான் எடுக்கப்பட்டபொருள் நான்கென்பர். அவை அறம் பொருள் இன்பம் வீடடைதல் ஆம். இந்நான்கும், அகம் புறம் எனுமிரண்டனுளடங்கும். ஈண்டு அகப்பொருளாகிய இன்பத்தினைக் கூறும் வாயிலான் பேரின்பினையுரைக்கும் இத்திருக்கோவையார் என்னும் நூற்கண் அழுது அடியடைந்த அன்பராகிய அறிவாற்சிவனும் பெரியார் எடுத்துரைக்கும் திருக் கோயில்களைப்பற்றியொரு சிறிதாராய்குதும்.

திருக்கோவையார் என்னும் இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தில்லைக் கூத்தனாராவார். இத்தில்லைப்பெரும்பதி சோழநாட்டகத்ததாகும். பாண்டி நாட்டகத்தும், ஏனைநாட்டகத்தும் எடுத்துரைக்குங் கோயில்களாவன :—

(1) கூடல் (ஆலவாய்) திருச்சுழியல், குற்றாலம், கொடுங்குன்று.

(2) சோழநாட்டகத்தன :— திரு இடை மருது, திரு ஈங்கோய், திருப்பனையூர், புலியூர், சிவநகர்.

(3) தொண்டைநாட்டகத்தன. திருக்கழுக்குன்று, வடநாட்டகத்தது கைலைமாநகர் என்பன. தில்லைத் திருச்சிற்றம்பலக் கோவை, திருக்கோவை யென வழைக்கப்பெறுகின்றது. தில்லையென்பது மரத்தின் பெயர். அப்பெயராலேயே ஊரிற்கும் பெயரிட்டு அழைக்கலாயினர். இக்காரணப்பெயர் போன்று, கோயில் புலியூர் பெரும்பற்றப் புலியூர், சிதம்பரம், புண்டரீகபுரம் சிற்றம்பலம், தில்லை வனம் எனப் பலபெயர்கள் காணப்பெறுகின்றன. ஒவ்வொரு பாட்டும் ஒரு துறைப்பாட்டாக அமையப்பெற்றுளது. நம்முடைய நாட்டில் நாயன்மார்களாலும் மற்றையடியவர்களாலும் பாடப்பெற்ற திருக்கோயில்களின் திருப்பெயர்கள் என்ன காரணத்தாலோ அதற்குரிய பெயர்கள் மாறியழைக்கப்பட்டு வழக்கில் காணப்பெறுகின்றன. அவற்றினையொருவாறு நீக்கல் வேண்டுமென்பதே இக் கட்டுரையின் அடிப்படைக்கருத்து. சோணாட்டில் பாடல்பெற்ற ஐந்து காக்கள் உள்ளன. அவை. திரு ஆனைக்கா, திருக்கோடிகா, திருநெல்லிக்கா, திருக் குரக்குக்கா, திருக்கோலக்கா என்பன. ஆனைக்காவல் கோவில் எனவும், கோடிக் காவல், நெல்லிக்காவல் எனவும் பொருளற்ற வகையில் மருளுற்று வழங்கப்பெறுகின்றன. என்னே விந்தை! திரு இடை மருது இடை மருதூர் என்பது திருவட மருதூர் என வழங்குகின்றது. திருஈங்கோய் என்பது திருஈங்கோயில் என்றும், திருவிங்கிநாதமலை யென்றும் இயம்பப்பெறுகின்றது. திருமழபாடியென்பது கோயிற்பெயர். இஃது எங்ஙனமோ மருவி திருமழுவாடி யெனவாகிப் பின்னர் பரசுநர்த்தனபுரி மொழி பெயக்கப்பெற்று மழுவாடித்தலபுராணமொன்று யாக்கப்பெற்றுள்ளது. புராணகாலம் அல்லாத (தோன்றுத) காலத்தில் சமயாசாரிய சுவாமிகளாகிய நால்வர் அருளிய தேவாராதி திருமுறைகளில் இப்பெயர் காணப்பெறவில்லை. திருக்கடவூர் என்பது திரிந்து திருக்கடையூர் என மாற்றியதற்குப் புராணம் புகல்வாராயினர். இவைகளைச் சைவமரபு, தமிழ் மரபு பிறழாதிருக்கப் பாதுகாவல்புரிதல் வேண்டும். எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும், பல்கோயில்கள் பாடப்பெற்றுள. திருக்கோவையாருரையினை, விசாகப்பெருமாளையர், ஆறுமுக நாவலர் முதலினோர் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளனர். பின்னர் பனந்தாள் மடத்திலும் பதிப்பித்துள்ளனர். எங்கள் சரசுவதிமால் நூல்நிலயத்திலும் வெளியிடப் பெற்றுளது ஒவ்வொரு பதிப்பிலும் பிறழ்வு இயற்கையாயமைந்துளது. சிவ தலங்களைக் காரணமின்றியே படைவீடென்கின்றனர். படைவீடெனிற் பொருள் யாது எனச் சிந்திக்கவில்லைப்போலும்.

பாண்டிநாட்டில் வாதவூரில் அவதரித்துள்ளனர் மாணிக்கவாசக சுவாமிகள். அந்நாட்டில், சமயகுரவரால் பாடல் பெற்றவையாகவுள்ளன

பன்னுன்கேயாகும். அவற்றுள் நான்கினைப்பற்றி வந்துள்ளவிடங்களை யாய்வோம். (1) கூடல், (2) கொடுங்குன்று, (3) குற்றாலம், (4) திருச் சுழியல் ஆய நான்குமேயாகும்.

(1) கூடல், நான்மாடக்கூடல் எனக் கூறப்பெறுவது. இத்தலத்திற்கு திருவாலவாய், மதுரை, தொன்னகரம், துவாதசாந்தத்தலம், சமட்டிவிச்சாபுரம், கடம்பவனம் முதலிய பல நாமங்களிட்டு அழைக்கப்பெறலைத் தலப் பெருமை யினைப்பற்றிக்கூறும் புராணத்திற் பரக்கக்காணலாம். ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை 'முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி' என்று துதிப்பர் அப்பர் பெருமான். பாண்டிநாடே பழம்பதியாகவுமென திருவாசகங் கூறு கின்றது. சுந்தரர் பாடல் இல்லையாயினும் சுந்தரர் வழிபட்டுப் பின்னர் திருப்பூ வணம் திருச்சுழியல் முதலிய தலங்களைத்தரிசித்துப் பாடல் பாடியுள்ளனர் எனப் பெரியபுராணம் பேசுகின்றது. சுந்தரர் பாடிப் பின்னர் மறைந்திருக்கலாம் போலும். கூடலைப்பற்றிய பாடல் வருமாறு :—

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே"

என்பது பாட்டு (20)

இப்பாட்டு பாங்கன்வினுதல் என்னுந்துறையாம். அஃதாவது, பாங்கனுனவன் தலைவனை நினைந்துவந்து எதிர்ப்பட்டு அடிமுதல் முடிகாறு நோக்கி நின்னுடைய தோள்களானவை மெலிந்து நீ இவ்வாருதற்குக் காரணம் யாதென்று முற்பட்டு வினவுதலாம்.

(இ-ள்) காவலாயுள்ள மிக்க நீரையுடைய தில்லைச்சிற்றம்பலமாகிய நல்ல இடத்தும் என் நெஞ்சம் ஆகிய தீயவிடத்தும் ஒப்பத்தங்குமவனது, உயர்ந்த மதிலையுடைய கூடற்பதிக்கண் ஆராய்ந்த ஒள்ளிய இனிய தமிழின் துறைகளிடத்து நுழைந்தனையோ! அதுவன்றி யேழிசையின் சூழலின் புகுதலினுலோ! தலைவா! பெரிய மலைபோலும் நின் தோள்கட்கு மெலியப் புகுந்தெய்தியது என்னே! என்பதாம் தமிழின் துறைகளாவன. ஈண்டும் அகமும் புறமுமாகிய பொருட் கூறு. ஏழிசையாவன ;— குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இவை பிறக்குமிடமும் உரிய மாத்திரைகளும் உரிய அக்கரங்களும் உரிய மணங்களும், ஓசைகளும் இவற்றிற்குரிய ஈசர்களும் பிறவுமே சூழலாகும். தொகுதி என்னும் பொருளது. இதற்குப் பொருள் மாருகக் காணப்படுவது ஆயத்தக்கது. சூழல் — என்பதற்குச் சூழ்ச்சியென்று எவ்வாறு பொருள் கோடறகும். இதனிடைச்சிறப்பு என்னையெனின் சங்கத் தமிழ்ச் சொக்கரும் புலவராக வீற்றிருந்தாராய்ந்த பெருமையுடைத்துச் செந்தமிழ். ஆகலின், ஆய்ந்த ஒண்டீந்தமிழ் என்று சிறப்புரைக்கப்பட்டது. இதனிடை இயல் இசை

நாடகம் என்னுமுத்தமிழிலும் முனைந்தாராய்ந்தமையின் உடல் மெலிவுற்றமை உரைக்கப்பட்டது. தூய்மையான வென்றவிடத்து தூய்தலான என்றிருப்பது அத்துணைப் பொருத்தமுடைத்தன்றாம். கொடுப்பாரும் அடுப்பாருமின்றி பாறர வந்த தலைவியுடன் காட்சி ஐயம்துணிவு குறிப்பறிவு முதலியவுற்றுப் பின் இயற்கைப் புணர்ச்சி யெய்தியபின் பாங்கற் கூட்டம் நிகழ்வது மரபு. அந்நிலையில் பாங்கன் (பாங்காயினான்) வினவுதலையுணர்த்துவதாயிற்று. இப்பாடல் தலைமகற்கு உற்றதுணர்தல் பயன் ஆம். மெய்ப்பாடு, அணங்கு பற்றி வந்த அச்சம்' அணங்கல் - வருந்தல். துன்பம் எனினுமாம் இறைவன் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான் என்றது பாட்டுடைத் தலைவனை. இறைவா – என்பது விளி. இஃது கிளவித்தலைவனை யுணர்த்திற்று. பாட்டுடைத் தலைவனையும் கிளவித்தலைவனையும் வேறு பிரித் துணர்வதே கோவையின் அடிப்படை. பனைக்கைமும் மதவேழமுரித்தவன், நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன் ஆகிய ஆண்டவன் சிற்றம்பலத்தி நட்டமாடுகின்றான். அவன் அன்பானினைவாருடைய உள்ளத்துறைபவன். அஃதேபோல் ஈண்டுபாங்கன், நன்றறி நாவலன் ஆகலின் என் சிந்தையுள்ளு முறைவான் எனச் சிறப்பித்துக்கொண்டான். என்னையொத்த நிலையினன் அன்றோ! நீ யாகுவை. அங்ஙனமிருப்ப இங்ஙனம் வந்துற்ற பெற்றியாது என வினவலாயினன்.

சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கூடலம்பதியாகிய மதுரையாகும். தமிழுக்கு அடைகொடுத்து ஆய்ந்ததமிழ் ஒண்டமிழ், தீந்தமிழ் என்றதை நோக்கல்வேண்டும். இறையருள்பெற்ற நிறைபறிவாளர் ஆய்ந்ததும் ஒள்ளிய (ஒட்பம்) பெற்றியதும், இனிமை பெரிதுடையதும் தமிழ் எனச் சிறப்பிக்கப் பெற்றதாம். இத்தமிழ் மூத்தமிழாம். பாட்டுக்குநருந் தமிழ்ச் சொக்கர் அழகிய சங்கத் தமிழ்ச் சொக்கர் என்றெல்லாம் இறைவன் அழைக்கப்பெறுகின்றார். இடைக்காடன் பொருட்டு (தமிழ்ப் புலவனுக்காக) திருக்கோயிலைவிட்டும் அகன்றார். தருமியின் பொருட்டுத் தமிழ்ப் புலவர் ஆகவும் புறப்பட்டு நக்கீரரோடும் வழக்குரைத்தார். பொய்யடிமையில்லாத புலவராயினார். சங்கத்திருந்து தமிழாய்ந்தனர். இவற்றினையெல்லாங் கருதியே கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழ் என்றனர். கருமமே கண்ணாயினார் தருமம். மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வியருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார் ஆகலின் செந்தமிழ்மொழி யினைச் சொல்லும் பொருளும் அல்லும் பகலும் ஆய்ந்த மெய்வருத்தத்தால் உண்டாய இளைப்புப்போலும் எனவினவி உட்கிடையினை உணர முற்படுகின்றான் பாங்கன். வேறெவற்றாலும் வாட்டமுறவேமாட்டாய் என்பது உறுதி என உள்ளுறுத்தியிங்ஙனம் வினவினன்.

பண்டித வித்துவான் இராம. கோவிந்தசாமி பிள்ளை,
தமிழாசிரியர், சரசுவதிமால் நூல்நிலையம், தஞ்சாவூர்.

श्रीमद्भागवत

(माधवात्मजकृत मराठीभाषान्तर)

प्रथमस्कंध–भाग १.

(अध्याय १ ते ७.)

संपादक

गो. नागराजराव्

मराठी पण्डिट्, सरस्वतीमहाल् ग्रंथालय, तंजावर.

प्रकाशक

एस्. गोपालन् बी. ए., बी. एल्.,

सन्माननीयचिटूणीस्, कार्यवाहकमंडली, सरस्वतीमहाल् ग्रंथालय,

तंजावर.

शके १८८२. सन् १९६०.

[किम्मत रू० १-५० न. पै.]

प्रस्तावना

तंजावरास विशेष शोभा आणविणारी श्रीसरस्वतीमहाल ग्रंथालयांत जे कांहीं महाराष्ट्र-ग्रंथें आहेत त्या सर्वग्रंथांच्या कर्तेजनांपैकीं श्रीमाधवस्वामी आणि त्यांच्या वंशजांसच अग्रस्थान लाभला आहे. कारण श्रीमाधवस्वामी आणि त्यांचे पुत्रपौत्र प्रपौत्र सारेजन अद्वितीय पण्डित होते. श्रीमाधवस्वामी सारखें कैक महान् पुरुषांनी आपापल्या निर्मित ग्रंथांचा भर घालून हातभार लाविले नसते तर, तंजावर प्रांतांत मराठी वाङ्मय पूर्णतेस पोहचलें नसतें इतुकें मात्र निक्षून सांगतां येईल. ॥

सरस्वतीमहाल ग्रंथालयांत मिळणाऱ्या पुराव्यावरून श्रीमाधवस्वामी यांनी श्री एकनाथ-महाराजांचे दौहित्र होय. परंतू महाराष्ट्रांतल्या संशोधक वर्गामधें श्रीमाधवस्वामींच्या पूर्वज्यां विषईं मतभेद आहे; आणि श्रीमाधवस्वामी हे कोणाचे कोण असले पाहिजेत या बाबतींत तर्कवितर्कहीं चालू आहे. कांहीं संशोधकांनीं आपापले मत लेखद्वारा प्रदर्शित केले आहेत. सद्यशः आम्ही त्या भानगडींत गुंतू इच्छित नाहीं आणि तंजावरच्या सरस्वतीमहालांत उपलब्ध आहे त्या पुराव्यांनाच वजन देऊं; तसेंच त्या पुराव्यांच्या आधारेंच पुढें चालू ॥

श्रीमाधवस्वामी हे श्री समर्थांचे प्रशिष्य होत; या विषईं कसलीहीं मतभेद आहेत्यापरी आजपावेतों एकीवांत आलें नाहींत. तंजावर संस्थानांत श्री समर्थांचे तींघे प्रमुख शिष्य होते. श्री भीमदास, श्रीमेरुस्वामी, व श्रीराघवदास असे ते तींघे शिष्यांनी क्रमेंनें तंजावर, मन्नारगुडी, आणि कोणूर या तीनी गावांत श्री समर्थसांप्रदायिक मठांचे अधिपती झालें. त्यांपैकीं श्रीराघवदासांचे शिष्य श्रीमाधवस्वामी यांनी त्रिवंदूर गांवी श्रीराममंदिरांत वस्ति केल्याचें कळूं येतें. त्याच मंदिरांत राहतां, श्रीमाधवस्वामी यांनी श्रीमद्रामायण, महाभारत, मल्लारीमाहात्म्य, गणेश-पुराण, विष्णुपुराण वगैरे वगैरे ग्रंथ रचना केल्याचेंहीं कळून येतें. श्रीमाधवस्वामी यांना तसेंच त्यांच्या वंशस्थानांहीं ओवीबद्ध ग्रंथरचनेंत फार आवड होती; त्यांचे ग्रंथ सगळेंहीं बहुत्करुन ओवीबद्धच आहेत. भाषेची शैली अति सरळ व सुलभ समजण्यासारखी आहे.

आतां यावर प्रस्तुत ग्रंथाकडे वळूं. श्रीसरस्वतीमहालग्रंथालयांतल्या मराठीग्रंथांच्या विभागांत टोकळ क्रमांक १४८५ त हा ग्रंथ आढळतो. ग्रंथकर्ता माधवात्मज होय. श्रीमाधव-स्वामी यांस राम व कृष्ण असें दोघे अपत्य होते. त्यांत ज्येष्ठ राम ऊर्फे रामापण्डित यांना गांवांत लोकांनी अद्वैत केसरी म्हणून आळवीत असे. या प्रथमस्कन्धाचा कर्ता जो श्रीमाधव-

स्वामींचा दुसरा मुलगा कृष्णापण्डित हे भगवद्भक्तींत मूर्तिमंत आणि उत्तमप्रकारचे उपन्यास कर्ते होते. तसेंच वेदांत, पुराण, भारत, भागवत वगैरेंत पुष्कळ स्फुट ग्रंथांचा रचताहीं केले आहेत ॥

ग्रंथ अति सुन्दर असून मुख पृष्ठावर सूत व शौनकादि ऋषी आणि शरतल्पी भीष्म, श्रीकृष्ण इत्यादी लोकांचा सुन्दर चित्र आहे. शकें १६९० सर्वधारी संवत्सर ज्येष्ठमास कृष्णपक्ष अष्टमी सौम्यवासरी ग्रंथरचना समाप्तीस आल्यापरी, या ग्रंथांतल्या १९ वा अध्याय पत्र १८० वरून कळून येतें; या आद्यस्कन्धाचा १९ अध्यायहीं तंजावर सरस्वतीग्रंथालायाच्या जर्नलांत प्रसिद्ध करणेच्या उद्देशानें हा काम हाती घेतला; तरी पण काहीं अडचणी पडल्यामुळें प्रथमस्कन्धाचा ७ अध्यायांचा प्रथम भाग प्रसिद्ध करणें भाग पडलें; पुढें श्रींचे आज्ञा जेव्हां होईल तेव्हां बाकीचे अध्याय प्रसिद्ध करतां येईल. वाचकवृंदांनी क्षमा केली पाहिजे ॥

तंजावर
15—9—1960

मो. नागराजराव्

घेऊनि दुसऱ्याचे प्राण ॥ जो खळ करुणाहीन ॥
स्वप्राणाचें संगोपन ॥ करी आपण अहर्निशी ॥ ९३ ॥

तद्वध जोकां दंड रूप ॥ तो त्यासीच श्रेयस्कर अमूप ॥
कांतरी दंडाचा घडल्यां लोप ॥ नरक कूपपात न चुके ॥ ९४ ॥

शरीरीं निपजल्यां व्रण ॥ शस्त्रें छेदाया भिऊनि आपण ॥
प्राणीं राहिल्यां उदासीन ॥ जेवि फार सीण पावे तो मग ॥ ९५ ॥

तेवि दंडार्ह न पावल्यां दंड ॥ दंडप्रयुक्त दुखाहुनी चंड ॥
चंडकर सुतद्वारा अखंड ॥ खंड खंड शरीरें घेड ॥ ९६ ॥

असो प्रजावंती ज्याचेनि गौतमी ॥ जो बुडाला हत्यादोष तमीं ॥
त्यातें निस्संशयें दमीं ॥ मूलकंद मी जगाचा वदतों ॥ ९७ ॥

